இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22-11-2025

# இதற்கு மேல் யார் சொல்ல வேண்டும்?

**“சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஆளுநர் நிறுத்திவைப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது” என்று உச்சந்தலையில் ஆளுநர் ரவியை கொட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். இதற்கு மேல் அவருக்கு அறிவுரையை யார் சொல்ல வேண்டும்.**

**“ஒரு மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது” என்று கிண்டி ரவிக்கு கிடுக்குப் பிடி போட்டுள்ளது உச்சநீதிமன்றம். இதற்கு மேல் அவருக்கு உறைக்கும் அளவுக்கு யார் சொல்ல முடியும்?**

நாகலாந்தில் இருந்து விரட்டப்பட்டவர் ஆர்.என். ரவி. தனக்கு வேண்டிய ஒரு அதிகாரியின் மூலமாக கெஞ்சிக் கூத்தாடி தமிழ்நாட்டுக்கு ஆளுநர் ஆனவர் ரவி. இங்கு இருந்த கெடுமதியானவர்கள் கையில் சிக்கினார். வந்தவர் தமிழ்நாட்டுக்குத் தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை நிறுத்தி வைத்தார்.

இறுதியாக உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆளுநரால் நிறுத்திவைக்கப்பட்ட 10 மசோதாக்களுக்கு சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்து தீர்ப்பு வழங்கியது.

“அரசமைப்புச் சட்டம் 142 ஆவது பிரிவின்படி உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஒப்புதல் தரப்பட்டவையாக நாங்கள் அறிவிக்கிறோம். நீண்ட காலமாக மசோதாவை நிலுவையில் வைத்திருந்த ஆளுநர், அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த தன் மூலமாக நேர்மையற்ற செயல் செய்துள்ளார். இது போன்று பஞ்சாப் அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பைத் தந்தது. அன்றைய தினம், குடியரசுத் தலைவருக்கு தமிழ்நாடு ஆளுநர் திருப்பி அனுப்பி இருக்கிறார். எனவே, மசோதாக்கள் மறுபரிசீலனைக்கு எப்போது தமிழ்நாடு அரசால் அனுப்பி வைக்கப்பட்டதோ, அந்த நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றன” என்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஜே.பி.பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு கடந்த ஏப்ரல் 8 அன்று தீர்ப்பு அளித்தது.

மசோதாக்கள் மீது ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் எனவும் காலக்கெடு விதித்தது. இந்தத் தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் 14 கேள்விகளை எழுப்பி உச்சநீதிமன்றத்திற்குக் கடிதம் அனுப்பினார்.

இந்த வழக்கை 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரணை நடத்தியது. தலைமை நீதிபதி கவாய் தலைமையிலான அமர்வு நேற்றைய தினம் மிக முக்கியமான சில கருத்துகளை அளித்துள்ளது.

★ ஆளுநர் காரணத்தைத் தெரிவிக்காமல் நீண்ட காலம் மசோதாவை நிறுத்திவைப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது.

★ மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும், குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம், சட்டப்பேரவைக்கு திருப்பி அனுப்பலாம். இந்த மூன்றில் ஒன்றைத்தான் ஆளுநர் தேர்ந்தெடுக்க முடியுமே தவிர, ஒன்றிய அரசு கூறுவதுபோல் நான்காவதாக எந்த வாய்ப்பும் இல்லை.

★ அரசியல் சாசனப்பிரிவு 200, 201-ன் படி மசோதாக்களுக்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்க வேண்டும். இல்லையெனில் சட்டப்பேரவைக்கு மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்ப வேண்டும்.

★ மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் காலவரம்பின்றி கிடப்பில் வைக்க ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே அதிகாரம் இருக்கிறது.

★ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், அதன் அமைச்சரவையுமே முதன்மையான இடத்தில் இருக்கிறது. மசோதாக்கள் விவகாரத்தில் இடையூறு விளைவிக்கும் அணுகுமுறையை ஆளுநர்கள் மேற்கொள்ளக் கூடாது. ஆளுநர் செயல்படாமல் இருந்தால் அரசியல் அமைப்பு, நீதிமன்றங்கள் அதனை ஆய்வு செய்யும்.

★ அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் செயல்பட வேண்டும்.

- இப்படி நெத்தியடியாகச் சொல்லி இருக்கிறார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

சித்த மருத்துவப் பல்கலைக் கழக மசோதா மீண்டும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்ன கருத்துகள் முக்கியமானது.

**“ஒரு சட்டமுன்வடிவு பேரவையில் விவாதிக்கப் படுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களுக்கு மட்டுமே அதில் திருத்தங்களை முன்மொழியவும், அதற்கான விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் திருத்தங்களைத் திரும்பப் பெறவும், இல்லையெனில், வாக்கெடுப்பைக் கோரவும் அதிகாரம் உள்ளது. இத்தகைய சட்டமுன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு அதன்மீது கருத்துகளைத் தெரிவிக்கும் அதிகாரம் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.**

**சட்டம் இயற்றுவது, இப்பேரவைக்கு மட்டுமே உள்ள அதிகாரம். ஆகவே, மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள அந்தக் கருத்துகள் அடங்கிய செய்தி அவைக் குறிப்பில் இடம் பெறுவதை மாநில சுயாட்சியில் நம்பிக்கை கொண்ட எந்த ஓர் உறுப்பினரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆளுநர் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில் இருக்கக்கூடிய அவரின் கருத்துகள் மற்றும் பேரவையின் மாண்பைக் குறைக்கக்கூடிய அந்த வார்த்தை அடங்கிய பகுதிகளை இப்பேரவை நிராகரிக்கிறது” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்தார்கள். இதனை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தந்தது.**

முதலமைச்சரின் உரிமைக் குரலை மிகச் சரியானது என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. முதலமைச்சர் சொன்னபோதெல்லாம் அது அரசியல் என்று ஒதுக்கி வந்த ஆளுநர், உச்சநீதிமன்றத்துக்கு என்ன சொல்லப் போகிறார்?

இப்படி ஒரு பதவியில் வேறு யாராவது இருந்தால், அவர்கள் இந்த மாதிரியான தீர்ப்பைப் பார்த்தால் அடுத்த நொடியே பதவி விலகி இருப்பார்கள். ஆனால் ஆர்.என்.ஆரிடம் இதை எல்லாம் எதிர்பார்க்க முடியாதே!

●●



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சீர்காழி, பேராவூரணி மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

## மீனவர்களின் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும்

# மீனவ நண்பனாக என்றும் - நமது திராவிட மாடல் அரசு தொடரும்!

## உலக மீனவர் நாளையொட்டி – முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ.22-

உலக மீனவர் நாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “மீனவர்களின் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும் மீனவ நண்பனாக என்றும் நமது திராவிட மாடல் அரசு தொடரும் !” என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக மீனவர் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**உழைப்பும் உறுதியும் மிக்க மீனவத் தோழர்கள் அனைவருக்கும் உலக மீனவர் நாள் வாழ்த்துகள்!**

**மீனவர் நல மாநாடு, மீன்பிடித் தடைக்கால நிவாரணம் உயர்வு, மானிய டீசல் அளவு உயர்வு, கடனுதவிகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள் என உங்கள் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும் மீனவ நண்பனாக என்றும் நமது திராவிட மாடல் அரசு தொடரும்!**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.11.2025) முகாம் அலுவலகத்தில், காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும், உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான விவேக் கே. தன்கா (Mr.Vivek K Tankha) சந்தித்து பேசினார். அப்போது முதலமைச்சர் அவர்கள் தான் எழுதிய ”உங்களில் ஒருவன் புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பான ”One Among You புத்தகத்தை விவேக் கே. தன்கா அவர்களிடம் வழங்கினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2025) சென்னை ஹாரிங்டன் சாலை வேம்புலி அம்மன் கோயில் திட்டப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வேம்புலி அம்மன் கோயில் மற்றும் சீனிவாசபுரம் பகுதி1 ஆகிய திட்டப் பகுதிகளில் மொத்தம் 89.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 584 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, த.வேலு, இ. பரந்தாமன், அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 275 வது நாள்!

## அமைச்சர் கே.என்.நேரு உணவு வழங்கினார்!

சென்னை, நவ.22–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனித நேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள்.

அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன் அவர்களும், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி அவர்களும், 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களும், 100வது நாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களும், 125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களும், 150வது நாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அவர்களும், 175வது நாள் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், 200வது நாள் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களும், 225வது நாள் சட்டம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்களும், 250வது நாள் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும், கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 275வது நாளான நேற்று (21.11.2025), கொளத்தூர், பெரியார் நகர், 68வது வார்டு, பால சுப்பிரமணியன் சாலை மற்றும் 67அவது வார்டு, செம்பியம், பல்லவன் சாலை ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ”நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்கே.என். நேரு அவர்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தினந்தோறும் 250 நாட்களுக்கும் மேல் 500க்கும் மேற்பட்ட இடங்களில் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டமானது நேற்றுடன் (21.11.2025) தற்பொழுது 275 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், திரு.வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது.

திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பகுதி செயலாளர்கள் ஐசிஎப்.வ.முரளிதரன், பி. நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.சந்துரு, மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், கூ.பீ.ஜெயன், நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) டாக்டர் சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.தாவுத்பீ, திருமதி.அமுதா பொன்னிவளவன், திருமதி.யோகபிரியா, திருமதி.சுதா தீனதயாளன், திருமதி.ராஜேஷ்வரி ஸ்ரீதர், திருமதி.நாகவள்ளி பிரபாகரன், டிஎஸ்பி.ராஜகோபால்,

வட்ட கழக செயலாளர்கள்: கே.பி.ஆதவன்மணி, கே.ஜார்ஜ்குமார், பி.ஊமைத்துரை, என். பொன்முடி, பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ். முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி. பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





